**+2 வணிகவியல் அரையாண்டுத் தேர்வு டிசம் - 25**

**சரியான விடை**

1. (இ) மும்பை
2. (ஆ) இரண்டும் சரி மேலும் ஆ என்பது அ க்கான சரியான விளக்கம்
3. (இ) இணையம்
4. (அ), ஆ ரொக்க ரசீது
5. (ஈ) அனைத்தும்
6. (அ) பொதுக் கீறலிடல்
7. (ஈ) திட்டமிடல்
8. (ஈ) சமநிலை பங்குசந்தை – கடனீட்டு பத்திரம்
9. (ஈ) திட்டக்கூறு
10. (இ) கோரப்படாத விண்ணப்பதாரர்கள்
11. (ஆ) செயலுக்கமளித்தல்
12. (ஆ) தனிநபர்
13. (அ) 3
14. (ஈ) 24
15. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
16. (அ) நுகர்வோர் திருப்தி
17. (ஆ) கட்டுப்படுத்த முடியாத
18. (ஈ) மூன்று
19. (ஈ) 1996
20. (அ) உலகமயமாக்கல்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மைக் கருவிகளை பட்டியலிடுக** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**22. ஊக வணிகர்களின் வகைகள் யாவை?** காளை, கரடி. கலைமான், முடவாத்து

**23. பங்கேற்று நடித்தல்:** பயிற்றுவிப்பாளர்கள் இந்த முறையில் பதவியின் சூழ்நிலையை அல்லது நியமிக்கப்பட்ட பாத்திரத்தை விளக்குவார்.பணியாளர் எந்த ஒத்திகையும் இல்லாமல் ஒதுக்கப்படும் பாத்திரங்களாக செயல்பட வேண்டும்.

**24. குறைவெண்** ஒரு தனிநபர் கூட்டமாக முடியாது. ஒரு நிறும கூட்டத்ததை கூட்டுவதற்கு குறைந்தளவு நபர்களாவது தேவை. அத்தகைய குறைந்தளவு நபர்களின் எண்ணிக்கையை குறைவெண் என அழைக்கிறோம்.

**25. திட்டமிடுதல்** முன்கூட்டியே முடிவெடுத்தலை திட்டமிடுதல் எனலாம்.

**26. சந்தை:** என்பது வாங்குவோர் மற்றும் விற்பவர் ஒருவருக்கு ஒருவர் இணைந்து போட்டியிடும் அல்லது பகுதியைக் குறிக்கும். **- பைல்**

**27. ஜான். F.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்** பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கேட்கும் உரிமை

**28. உட்புறச் சூழல்** என்பது நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணியாகும். இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ளலாம்.

**29. பகராள் சிறு குறிப்பு வரைக.** நிறுமக் கூட்டத்தில் ஒரு பங்குநரின் பிரதிநிதியாக செயல்பட்டு பங்குநரின் முடிவுகளை செயல்படுத்தும் முகவரை பகராள் எனலாம். இவர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். ஆனால் வாக்களிக்க முடியாது.

**30.** தொழில் முனைபவர் அவசியம் **முடிவு எடுக்கும் திறனை பெற்றிருக்க வேண்டும்.** ஏனெனில், எந்த தொழில் துவங்கலாம், என்ன உற்பத்தி செய்வது, எவ்வகையான தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது போன்ற முக்கிய முடிவுகளை விரைவாகவும் அவசர சூழ்நிலைகளில் எடுக்க வேண்டியது இருக்கலாம்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகள்:** சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்துதல்.

நோக்கத்தை மாற்ற அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்கிறது,

நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

**32. செயற்கைப் பற்றாக்குறை:** வணிகர்கள் தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர் பலகையை வைப்பது செயற்கைப் பற்றாக்குறை ஆகும்.

**33. மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்கள்** தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை தங்களின் அறிவு ஆற்றல், வல்லமையை வைத்துக் கொண்டு வேறு முறையில் வடிவமைப்பவர்கள். இவர்கள் மேலை நாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்கள் தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

**34. சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளைத் தருக.** நிறுமம் தனது பெயரைத் திருத்த, இயக்குநர்களைப் பணியமர்த்த, நிறுமப் பங்கு முதலை மாற்றியமைக்க.

| 35. அடிப்படை | மாற்றுமறைத் தன்மை | உரிமை மாற்றம் |
|---|---|---|
| சட்டமுறை உரிமை மாற்றம் | ஒப்படைப்பதன் மூலம் உரிமை மாற்றம் | சட்ட சடங்குகள் நிறைவேற்றி உரிமை மாற்றம். |
| மறுபயன் | மறுபயன் இருக்கும். | மறுபயனை மெய்பிக்க வேண்டும். |
| அறிவிப்பு | கடனாளியிடமிருந்து பணத்தை செலுத்தி கேட்க தேவையில்லை. | கடனாளியிடமிருந்து கடன் செலுத்த அறிவிக்க வேண்டும். |
| உரிமையின் தன்மை | பெறுபவரின் உரிமை பழுதற்றது | மாற்றுபவர், பெறுபவர் இருவருக்கும் பழுதான உரிமை ஏற்படும். |

**36. இரண்டாம் நிலைச் சந்தை பற்றி சிறு குறிப்பு**
ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

**37. மனித வளங்களின் இயல்புகள்:** உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனிதவளம் திகழ்கிறது. மனிதவளம் உணர்ச்சி பூர்வமானவை. மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது, அனைத்து வளங்களையும் மனிதவளம் உருவாக்குகிறது.

**38. தனியிடச்சந்தை:** உண்மையில் இது ஒரு சந்தையே அல்ல. குறிப்பிட்ட ஒரு பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து முயற்சிகளின் செயல்பாடாகும். எ.கா: விளையாட்டுச் சேனல்கள் அதற்காக மட்டும் ஏற்படுத்தப்படுகிறது.

**39. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள்:**
உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக சம்பந்தப்பட்ட மாநில அரசால் பதவி அமர்த்தப்பட்ட நபர் அந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படலாம்.
பொருளாதாரம், சட்டம், வணிகம் மற்றும் தொழில் நிர்வாகம் போன்ற துறைகளில் ஏற்படும் சிக்கல்களைக் கையாளும் திறமை கொண்டவர்களையும் நியமிக்கலாம்.

**40.** மாற்றுமுறை ஆவணத்தில் மேல் எழுதிட இடம் போத வில்லை என்றால் மேலும் மேல் எழுதச் செய்ய **ஒரு தாளை பயன்படுத்தலாம் அத்தாள் ஒட்டுத்தாள்** எனப்படும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) நுகர்வோரின் கடமைகள் யாவை?**

**தரமான பொருட்களை வாங்குதல்:-** பொருட்களை வாங்குவதற்கு முன்பு அதனைப் பற்றி முழுமையான விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

**பொருட்களின் எடை அளவு உறுதி செய்தல்:-** பொருட்களின் அளவு, எடை இவற்றை வாங்கும்முன் உறுதி செய்ய வேண்டும்.

**விவர அட்டைகளை படித்தல் :-** பொருட்களின் விவர அட்டைகளை முழுமையாக படிக்க வேண்டும்.

**தவறான விளம்பரம் மீது எச்சரிக்கையாக இருத்தல் :-** விற்பனையாளர்கள் அளிக்கும் தவறான விளம்பரங்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**ரொக்க இரசீதை உறுதி செய்தல்:-** பொருட்களுக்கான இடாப்புடன் ரொக்க இரசீது, உத்திரவாத அட்டை போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் கடமையாகும்.

**41ஆ) நிதிச்சந்தையின் பங்கினை விவாதிக்கவும்**

**சேமிப்பை பெருக்குதல்:-** தனி நபர், நிறுவனங்கள், அரசு போன்றவற்றின் மூலம் நிதிகளை பெருக்குகிறது.

**முதலீடுகள்:-** முதலீடுகளை வசூலித்து தேவைப்படுபவர்களுக்கு வழங்குகிறது.

**தேசிய வளர்ச்சி:-** உபரி நிதிகளை ஆக்க பூர்வமான முறையில் பயன்படுத்தி தேசிய வளர்ச்சிக்கு உதவுகிறது.

**தொழில் முனைவோர் வளர்ச்சி:-** தொழில் முனைவோருக்கு நிதி அளித்து அவர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது,

**தொழில் மேம்பாடு:-** தொழில்துறையை வளர்ச்சி அடையசெய்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

**42.அ) வகுப்பு கூட்டம்** ஒரு குறிப்பிட்ட வகையான பங்குகள் அல்லது கூட்டங்கள் குறிப்பிட்ட வகையான கடனீட்டுப்பத்திரங்களும், கூட்டப்படும் கூட்டம் வகுப்பு கூட்டம் ஆகும். சாதாரண பங்குகள் (எ) முன்னுரிமை பங்குகள் கூட்டப்படும் கூட்டத்தை கூறலாம்.
அவ்வப்பொழுது மாற்றி அமைக்கப்படும் கடனீந்தோர் பத்திரம், பாதுகாப்பு பத்திர விதிகளுக்கு கூட்டப்படும் இக்கூட்டங்கள் கூட்டப்படுகிறது, நிறும மறுஅமைப்பு, நிறும ஒருங்கிணைப்பு மற்றும் நிறும களைப்பின் போது கடனீட்டுப்பத்திர (அ) பிணையப்பத்திர உரிமையார்களின் நலன் பாதிக்கப்படாமல் பாதுகாக்க இக்கூட்டங்கள் கூட்டப்படுகிறது.

**கடனீந்தோர் கூட்டம்** நிறுமக் கூட்டங்களை போல இது ஒரு நிறும கூட்டம் அல்ல இருப்பினும், இது ஒரு புதிய கடன் கொள்கையை அறிமுகம் செய்யும் போது அல்லது கடனீந்தோர்கள் தொடர்பபான சில வழக்குகளை பேசி முடிவு

எடுக்கவும், கடனீந்தோர்களுடன் சில ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவும் இவ்வகை கூட்டங்கள் கூட்டப்படுகிறது.

**42.ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை ஏதேனும் ஐந்து விளக்குக.**

**இடமாற்றம்:-** உபரிப்பணியாளர்களை பணிமாற்றம் செய்வதன் மூலம் பணியாளர்களை நிரப்பலாம்.

**பதவி உயர்வு:-** பணி மூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் நிரப்பலாம்.

**பதவி இறக்கம்:-** குறைவான செயல்திறன் உடையவர்களை கீழ்நிலை பணிக்கு மாற்றுவது.

**ஓய்வுபெற்றவர்கள்:** தகுதி, அனுபவமுள்ள ஓய்வுபெற்ற பணியாளர்களைகொண்டு காலியிடத்தை நிரப்பலாம்.

**சார்ந்தவர்கள்:-** இறந்த பணியாளர்களுக்கு பதிலாக அவர்களின் சட்ட வாரிசுதாரர்களை நியமிக்கலாம்.

**43.அ)நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**43.ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக.**

**நிதி அளிப்பவர்:-** வணிகம் சிறந்த முறையில் இயங்க முக்கிய பங்கு வகிப்பவர்கள் கடனீட்டு பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகும்.

**சரக்கு விற்பனையாளர்கள்:-** சரக்கு விற்பனையாளர்களின் முக்கியத்துவத்தை நிறுவனங்கள் உணர்ந்து அவர்களுடன் நல்ல உறவை வளர்க்க வேண்டும்.

**சந்தையிடுகைஇடைநிலையர்கள்:-**இவர்கள் நிறுவனத்தையும்,நுகர்வோரையும்இணைக்கும்பாலமாக திகழ்கின்றனர்.

**வாடிக்கையாளர்கள்:-** வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார். வியாபாரத்தின் நோக்கம் அதன் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றுவதாகும்..

**போட்டியாளர்கள்:-** அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**44.அ) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகள்:**

சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் செய்தல்.

நிலை மூலதனம் திரட்டுதல்.

தொழிற்துறை வளர்ச்சியடைதல்.

உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தையிடல்.

செயல்திறனுக்கு நம்பகமான வழிகாட்டுதல்.

**44.ஆ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**45.அ) செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.

பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.

நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

**45.ஆ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக**

**இரு தரப்பினர்:-** விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் மற்றும் விற்பவர் உள்ளனர்.

**பொருளின் மீதான உரிமை மாற்றம்:-** விற்பவர் பொருளின் மீதான உரிமையை மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தர வேண்டும்.

**சரக்கு:-** அசையும் சொத்துக்கள் அனைத்தும் சரக்கு ஆகும். (எகா:-. பங்குகள், நற்பெயர்)

**விலை:-** பொருளின் விற்பனைக்கான மறுபயனே விலை ஆகும்.

**விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு:-** பொருட்களின் உரிமை உடனே மாற்றினால் அது விற்பனையாகும். பொருட்களின் உரிமையை எதிர்காலத்தில் மாற்றுவது விற்பனை உடன்பாடாகும்.

| 46. அ) அடிப்படை | ஆட்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|---|
| அணுகுமுறை | நேர்மறையான ஓர் செயல்முறை | எதிர்மறையான ஓர் அணுகுமுறை |
| வரிசை | முதல் படி | இரண்டாம் படி |
| முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| செயல்முறை | மிகவும் எளிதானது | மிகவும் சிரமம் சிக்கலானது |
| காலம் | குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

| 46. ஆ) பங்குகள் | கடன் பத்திரங்கள் |
|---|---|
| பங்கு முதலில் ஒரு பங்கு | இது ஒரு கடன் ஆவணம் |
| பங்குகளை வைத்திருப்பவர் உரிமையாளர் | கடன்பத்திரங்களைவைத்திருப்பவர் கடனீந்தோர் |
| பங்காதாய வீதம் மாறக்கூடியது | வட்டிவீதம் நிலையானது |
| வாக்களிக்கும் உரிமை உண்டு | வாக்களிக்கும் உரிமை இல்லை |
| சில நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடியில் வெளியிட முடியும் | கடன்பத்திரங்களை தள்ளுபடியில் வெளியிடலாம் |

**47.அ) காசோலையின் இயல்புகள்:**

**எழுத்து வடிவில் இருத்தல்:-** காசோலை எழுத்து வடிவில் வரையப்பட்டிருக்க வேண்டும். வங்கியர் காசோலையை அச்சிட்டு தருகிறார்கள்.

**குறிப்பிட்டவங்கியர்மீது வரைதல்:-** காசோலையை ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுத முடியும்.

**நிச்சயமான ஒரு தொகை:-** வங்கியரை ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும்படி ஆணையிட வேண்டும்.

**கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது:-** காசோலையை கேட்டவுடன் தருமாறு எழுதப்பட வேண்டும்.

**எழுதுபவர் கையொப்பம்:-** எழுதுபவர் கையொப்பம் இட வேண்டும். வரைபவரின் கையெழுத்து வங்கியரால் ஒவ்வொரு முறையும் ஒப்பிட்டு பார்க்கப்படும்.

**47.ஆ) பயிற்சியின் நன்மைகள்:** தொழிலாளர் உற்பத்தி திறனை அதிகரிக்கிறது.

இது ஊழியர்களின் திறமையை அதிகரிக்கிறது மற்றும் இலாபத்தை மேம்படுத்துகிறது.

இது மூலப்பொருள் சேதத்தினையும் மற்றும் நேரத்தினையும் குறைக்கிறது.

இது மேற்பார்வைக்கான நேரத்தைக் குறைக்கிறது.

வாடிக்கையாளர்கள் தரமான பொருள்களின் சேவையை பெற முடிகிறது.